(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 387/2019 அ.சா.8

Name : திரு. அழகுராஜா

Father's name :

Village :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.07.2026.

**( எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

நான் தற்போது மேலூர் தாலுகா, கீழவளவு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.07.2019 ம் தேதியன்று காலை 05.30 மணியளவில் அவனியாபுரம் காவல்நிலைய காவல் ஆய்வாளர் போன் செய்து ஒரு கொலை வழக்கு சம்பந்தப்பட்ட குற்றவாளியை கைது செய்து, கொலையாளி பயன்படுத்திய மரக்கட்டையை கைப்பற்ற வேண்டுமென்று என்னை அழைத்தார்கள். நானும் கிராம உதவியாளர் ராமன் என்பவரும் அவனியாபுரத்தில் உள்ள வள்ளானந்தபுரம் ஆஞ்சநேயர் கோவில் அருகில் சென்றோம். அப்போது ஆஜர் எதிரியை காவல் ஆய்வாளர் என்னிடம் அடையாளம் காட்டி, ஆஜர் எதிரியிடம் என் முன்னிலையிலும், கிராம உதவியாளர் முன்னிலையிலும் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் செம்பூரணி ரோடு சந்திப்பு அருகில் உள்ள முள்புதரிலிருந்து சீமக்கருவேலை மரக்கட்டையை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த அத்தாட்சியில் நானும் கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சியில் முதலில் உள்ள

கையொப்பம் என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :-

என் சொந்த வீடு அழகர்கோவில் அருகில் பஞ்சதாங்கிபட்டி கிராமத்தில் உள்ளது. அங்கிருந்து நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரியும் கிராம் சுமார் 30 கி.மீ தொலைவில் உள்ளது. என்னை 14.07.2019 ம் தேதியன்று காவல்துறையினர் அழைத்தபோது நான் என் சொந்த கிராமத்தில் இருந்தேன். நான் காலை சுமார் 06.30 மணிக்கு அவனியாபுரத்திற்கு வந்துவிட்டேன். சம்பவ இடத்திற்கு எத்தனை பேர்கள் சென்றோம் என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் நானும், கிராம உதவியாளர் மற்றும் காவல் துறையினரும் வந்தார்கள். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை யார் எழுதியது என்று பெயர் தெரியாது. அதுபோல் அத்தாட்சியை தயார் செய்த நபரின் பெயர் தெரியாது. அத்தாட்சியில் சீமக்கருவேலை மரக்கட்டை என்று கண்டுள்ளது என்றால் சரிதான். அதில் இரத்தக்கறை படிந்துள்ளது என்று குறிப்பிடவில்லை. அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை கணினியில் தயார் செய்யப்பட்டது. வள்ளானந்தபுரம் ஆஞ்சநேயர் கோவில் திறந்திருந்து. அங்கு பூசாரி மற்றும் பக்தர்கள் இருந்தார்கள். எதிரியை முதலில் காவல் ஆய்வாளர் அடையாளம் காட்டினார். எதிரி நான் குறிப்பிடுவது போல் நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து எதிரி கைது செய்யப்படவில்லை என்றும், ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றும், எதிரி என் முன்னிலையில் எந்த பொருளும் எடுத்து ஆஜர் செய்யவில்லை என்றும், பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** - இல்லை.

Sd/- அழகுராஜா

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.07.06 18:49:03 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

மதுரை.